

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.7.2025) புனித தோமையார் மலை தேவாலயம் (St. Thomas Mount National Shrine Basilica) உலக புகழ் பெற்ற தேவாலயமாக போப் ஆண்டவரால் அறிவிக்கப்பட்டு, அந்த விழாவிற்கான அழைப்பிதழை பங்கு பேரவை தலைவர் சார்லஸ், தாமஸ் மவுண்ட் அதிபர் அருட்தந்தை மைக்கேல் ஆகியோர் வழங்கினர். உடன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி உள்ளார்.

### நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட அளவிலான

# வளர்ச்சி ஒருங்கிணைப்பு - கண்காணிப்புக் குழு கூட்டம்!

## நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, ஜுலை, 4–

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டம், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தலைமையில், அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை யில் நேற்று முன்தினம் (02.07.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நீலகிரி, கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட திட்டங்கள் குறித்தும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், தூய்மை இந்தியா திட்டம், ஜல் ஜீவன் மிஷன், பிரதான் மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்), கலைஞர் கனவு இல்லம், ஊரக பகுதிகளில் பழுதடைந்த வீடுகளை சீரமைத்தல், பழங்குடியினருக்கு வீடுகள் கட்டும் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்;டம், நமக்கு நாமே திட்டம், பொது நூலக கட்டிடங்கள், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம், ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம், நபார்டு திட்டத்தின் கீழ் புதிய பள்ளி கட்டிடம் கட்டுதல், 15வது நிதிக்குழு மானியத்தின்கீழ் சுகாதார கட்டிடங்கள் கட்டுதல் ஆகிய திட்டங்களின்கீழ்; நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சம்மந்தப்பட்ட துறைச் சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பேரூராட்சி கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம், தோட்டக்கலைத் துறை, சமூக பாதுகாப்புத்திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்; உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்;டங்கள் குறித்து அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில், நடைபெற வேண்டிய மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கடந்த இரண்டு நிதியாண்டுகளாக தமிழக அரசாலும், ஒன்றிய அரசாலும் வழங்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் 95 சதவீதம் பணிகள் நீலகிரி மாவட்டத்தில் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க உரிய அறிவுரைகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாவட்டத்தின் வளர்ச்சி பணிகள் திருப்திகரம் என்பதை விட பாராட்டுதலுக்குரியதாக உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த போது, புதியதாக கட்டப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரியில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, மருத்துவ கல்லூரி மற்றும் விடுதிக்கு குடிநீர் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கையினை உடனடியாக ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23 கோடி ரூபாய் செலவில் மருத்துவக்கல்லூரி மற்றும் விடுதிகளின் பயன்பாட்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பிலும், எனது சார்பிலும், மாவட்ட ஆட்சித்தலைவர் சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில், நடைபெற்று வரும் பணிகளை மழைக் காலங்களுக்கு முன்பாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும், சரியான முறையில் திட்டமிட்டு வளர்ச்சி திட்ட பணிகளை முடிக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, நடைபெற்ற பொது விநியோக திட்டத்தின் காலாண்டு கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டு, மின்னணு குடும்ப அட்டைகள் வாரியாக அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும் விவரங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்குகளின் கொள்ளளவு, அத்தியாவசிய பொருட்களின் இருப்பு உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்ஜெயசீலன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அபிலாஷா கௌர், மாவட்ட வன அலுவலர் (கூடலூர்) வெங்கடேஷ் பிரபு, குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் கண்காணிப்பு பொறியாளர் (பொ) செல்வகுமார், மகளிர் திட்ட இயக்குநர் (பொ) திருமதி மதுரா, நகர்மன்ற தலைவர்கள் திருமதி வாணீஸ்வரி (உதகை), திருமதி சுசீலா (குன்னூர்), நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார் (உதகை), கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் தயாளன், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், மாநில நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியாளர் குழந்தைராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.சோமசுந்தரம், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்த் கல்கி, நகராட்சி ஆணையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், செயல் அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

# திருச்செங்கோடு நகரக் கழகம் சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்க பொதுக்கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி – ஆரணி மாலா சிறப்புரை!

நாமக்கல் ஜுலை 4–

நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக மற்றும் திருச்செங்கோடு நகர திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு இயக்க பொதுக்கூட்டம் புதிய பேருந்து நிலையம் ரவுண்டானா அருகில் நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமை தாங்கினார்.

திருச்செங்கோடு மேற்கு நகர கழகப் பொறுப்பாளர் ஆர்.நடேசன், கிழக்கு நகர கழகப் பொறுப்பாளர் தா.கார்த்திகேயன், நகர்மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரணி மாலா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசிய போது, சாமி கு ம்பிட வேண்டாம் என சொல்கிற கட்சி அல்ல திமுக. சாமி பெயரைச் சொல்லி பிரச்சனையை உண்டாக்க நினைத்தால் அதை தடுக்கிற கட்சி தான் திமுக.ஆறு மாதத்திற்கு முன்பு வரை பாஜகவோடு எப்பொழுதும் கூட்டு இல்லை எனக் கூறிய எடப்பாடி பழனிச்சாமி, இன்று பாஜகவை விட்டால் வேறு வழியில்லை என கூறுகிறீர்களே வெட்கமாக இல்லையா? திமுகவை அழித்து விடுவேன் என்று சொன்னவர்களுக்கெல்லாம் கல்லறை கட்டி அழகு பார்த்த இயக்கம் திமுக. பெண்களுக்காக வேண்டும் நடக்கிற ஆட்சி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் மயில்சாமி, சாந்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜிஜேந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ் பாபு, திருச்செங்கோடு வடக்கு ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் ஜி.தங்கவேல், தாமரைச்செல்வன், பழனிவேல், நாச்சிமுத்து, தளபதி செல்வம், இளங்கோவன், செல்வராஜ், எம். தங்கவேல், நகர செயலாளர்கள் அ..குமார், விஜய் கண்ணன், ஞானசேகரன், செயலாளர்கள் திருமலை, பேரூர் செயலாளர் திருமலை, திருச்செங்கோடு நகர அவைத் தலைவர் மாதேஷ், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என 500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

இறுதியாக திருச்செங்கோடு நகர இளைஞரணி செயலாளர் செங்கோட்டுவேல் நன்றி கூறினார்.



நீலகிரி மாவட்ட திமுக சார்பில், 'ஓரணியில் தமிழ்நாடு; விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் உதகை எ.டி.சி., ஜீப் நிறுத்தம் அருகில் நடைபெற்றது. உதகை கிழக்கு நகர செயலாளர் ஜார்ஜ் வரவேற்றார். கழக துணை பொதுச்செயலாளர் – நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் – அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஷ்குமார், தென்றல் செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



திருச்சியில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை முகாமை கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு திருச்சி தில்லைநகரில் உள்ள அவரது இல்லத்தில் உறுப்பினராகி இந்த உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார். தொடர்ந்து திருச்சி மேற்கு தொகுதிக்குட்பட்ட ஆழ்வார்த்தோப்பு, தில்லைநகர், பொன்நகர் உள்ளிட்ட பகுதிகளில் நேரடியாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை முகாமை தொடங்கி வைத்து அப்பகுதியைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மாநகர மேயர் அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மண்டல பொறுப்பாளர் கேசவன், திருச்சி மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஏ கே அருண், மேற்கு தொகுதி அமைப்பாளர் கோவிந்து, மாமன்ற உறுப்பினர் கமால் முஸ்தபா, மோகன்தாஸ், கனகராஜ், ராமதாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர்கலந்து கொண்டனர்,



முதலமைச்சர் அவர்கள் சென்னையில் (02.07.2025) அன்று இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 32 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலில் 35 இணைகளுக்கான திருமணங்களை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினர். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், இல.பத்மநாதன், தாராபுரம் நகர்மன்றத்தலைவர் கு.பாப்புக்கண்ணன், இணை ஆணையர் ரத்தினவேல் பாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

### சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# 'ஓரணியில் தமிழ்நாடு' மாபெரும் பேரணி - பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் சிறப்புரை!

சேலம், ஜுலை, 4–

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஆத்தூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடக்கு நகர செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார், தெற்கு நகர செயலாளர் ஏ.ஜி.ராமச்சந்திரன் வரவேற்புரையாற்றினார்.

நகர மன்ற தலைவர்கள் நிர்மலா பபிதா மணிகண்டன், அலெக்சாண்டர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம், தலைமை கழக பேச்சாளர் கோவை சம்பத், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், கணேஷ்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் சந்திரமோகன், மலர்விழி ராஜா, மனோகரன், முத்துலிங்கம், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், வரதராஜன் ,அழகுவேல், மூர்த்தி, சிவராமன், தங்கமருதமுத்து, விஜயகுமார், மாதேஸ்வரன், மாணிக்கம் , சக்கரவர்த்தி, ரத்தினவேல், சதீஷ்குமார் , நரசிங்கபுரம் நகர செயலாளர் வேல்முருகன், மாவட்ட பிரதிநிதிகள் சம்பத்குமார், ஸ்டாலின், பாலமுரளி கிருஷ்ணன், நகர துணை செயலாளர்கள் புவனேஸ்வரி வேல்முருகன், குமார், மாணிக்கம், பேரூர் செயலாளர்கள் காங்கமுத்து, வெங்கடேசன், பாபு, பாலமுருகன், முருகப்பிரகாஷ், செல்வராஜ் , சண்முகம், சரவணன், வேலு, முருகேசன், சார்பு அணி நிர்வாகிகள் பர்கத் அலி, அருண்குமார், சிவராமன், தனசேகரன் , சேகர், செல்வமணி, லியாகத் அலி, காளியம்மாள், சரண்யா, சாந்தி, சசிகுமார், செல்வராஜ், ராஜவேல், கருணாநிதி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டம் முடிவில் செந்தில்குமார் நன்றியுரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணையின் படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க, மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கும் வகையில் 'ஓரணியில் தமிழ்நாடு' இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் திருப்பூர் தெற்கு மாவட்டம் உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி கிருஷ்ண கானம் மஹாலில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மனித வள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராம்கிருஷ்ணன் உள்பட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதள முகவர்கள் (BDA) மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நகர பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' குறித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி, தலைமைக் கழக பேச்சாளர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே. விக்ரமன்,கலைஞர் பித்தன் டி ஏ ரவி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.கூட்டத்தில் தருமபுரி முன்னாள் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி,நகர கழக செயலாளர் நாட்டான் மாது,பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எம்.பி.பாரி, மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி,ஆறுமுகம், ரேணுகாதேவி, ஒன்றிய கழக செயலாளர்கள் சண்முகம், பி.என்.பெரியண்ணன்,மல்லமுத்து,வைகுந்தம்,காவேரி,ஏரியூர் செல்வராஜ்,முருகேசன், கருணாநிதி, வீரமணி, பச்சையப்பன்,கிருஷ்ணன், சக்திவேல் உள்ளிட்ட கழகத்தினர்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.